MAALAI MALAR

18 SEP 2022

PAGE 3



# கி.ராஜநாராயணன் நூற்றாண்டு விழா

புதுச்சேரி, செப் 18—. புதுவைப் பல்கலைக் கழக சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலத்தில் கி.ரா. அறக்கட்டளை சார்பில் கி.ராஜ நாராயணனின் நூற்றாண்டு விழா தொடக்க நிகழ்வு கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியில் தமிழியற்புல முதன்மையர் சந்திரிகா, பேராசிரியர்கள் கருணாநிதி, ரவிக்குமார், பழனிவேலு, தனலட்சுமி, சிலம்பு நா.செல்வராசு, பக்தவத்சல பாரதி, சம்பத், வெங்கட சுப்புராய நாயகர், எழுத்தாளர்கள் சீனு.தமிழ்மணி, புதுவை இளவேனில், முனைவர் பட்ட ஆய்வாளர்கள், முதுகலை மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

புல முதன்மையர் சந்திரிகா தலைமை தாங்கினார். கி.ராஜநாராயணனின் நினைவுகளைப் பேராசிரியர், பக்தவத்சல பாரதி, இரா.சம்பத், பழனிவேலு, சீனு.தமிழ்மணி உள்ளிட்டோர் பகிர்ந்து கொண்டனர். நிகழ்ச்சியை பேராசிரியர் ரவிக்குமார் ஒருங்கிணைத்தார். நிகழ்ச்சியை பட்ட ஆய்வாளர் யூசுப் ஷெரிப் தொகுத்து வழங்கினார்.

DINAKARAN

18 SEP 2022

PAGE 12

# ஆரோவில் கடற்கரையை சுத்தம் செய்த கடலோர காவல் படை

## பள்ளி, கல்லூரி, பல்கலை மாணவர்கள் பங்கேற்பு



ஆரோவில் கடற்கரை பகுதியை இந்திய கடலோர காவல்படை மற்றும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் இணைந்து சுத்தம் செய்தனர்.

**காலாப்பட்டு, செப். 18:** விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் நகராட்சிக்கு உட்பட்ட ஆரோவில் கடற்கரை பகுதியை இந்திய கடலோர காவல்படை, கடலோர பாதுகாப்பு குழுமம், புதுவை பல்கலைக்கழக மாணவ, மாணவிகள், என்சிசி மாணவர்கள், தாகூர் கலை கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியர், கடலோர காவல் அமலாக்க பிரிவு மற்றும் மீன்வளத்துறை இணைந்து சுத்தம் செய்தனர். மேலும், புதுகுப்பம், எக்கியார்குப்பம் ஆகிய பகுதிகளில் பணியாற்றும் காவலர்கள் மற்றும் ஊர்காவல் படை வீரர்களும் பங்கேற்று சுத்தப்படுத்தினர்.

இதேபோல், பெரிய காலாப்பட்டு, சின்ன காலப்பட்டு, கனகசெட்டிகுளம் பகுதிகளில் புதுச்சேரி அரசு சார்பில் கடற்கரை சுத்தம் செய்யும் பணி நடந்தது. இதில் பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

DINATHANTHI

18 SEP 2022

PAGE 7

### கியூட் தேர்வில் வெற்றி பெற்ற

# மாணவர்கள், ஒருங்கிணைந்த முதுகலை படிப்பிற்கு விண்ணப்பிக்க அழைப்பு

புதுச்சேரி, செப்.18-

புதுவை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

பொது பல்கலைக்கழக நுழைவுத்தேர்வு கியூட்-22க்கான முடிவுகளை தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. புதுவை பல்கலைக்கழகத்தின் தகுதி அளவுகோலின்படி கியூட் 2022-ல் வெற்றி பெற்ற மாணவர்கள் வரும் கல்வியாண்டில் ஒருங்கிணைந்த முதுகலை பாடத்திட்டங்களில் சேர விண்ணப்பிக்கலாம். மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க ஆன்லைன் இணைப்பு விரைவில் வழங்கப்படும். ஆர்வமுள்ள மாணவர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் *https:/www.pondiuni.edu.in/admission-2022-23/*-ல் உள்ள தகவல்களை பதிவிறக்கம் செய்து படிப்புகளுக்கு தேவையான தகுதிகளை தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் பல்கலைக்கழக இணையதளத்தை தவறாமல் தொடர்ந்து பார்த்து வர வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.